8

J. Janith VIII - A.

Register No. 8115.

# காலாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 10x1=10

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
2. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது
அ) விளக்கு ஆ) விளையாட்டு இ) கல்வி ஈ) பாட்டு
3. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ...........
அ) பொழுது ஆ) வரவு இ) தகவு ஈ) மரபு
4. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) வான+மளந்தது ஆ) வான்+அளந்தது இ) வானம்+அளந்தது ஈ) வான்+மளந்தது
5. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு
6. வானில் கரு ......... தோன்றினால் மழை பொழியும் என்பர்.
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
7. செவ்வியந்தியர்கள் நிலத்தைத் ............ மதிக்கின்றனர்
அ) தந்தையாக ஆ) தெய்வமாக இ) தூய்மையாக ஈ) தாயாக
8. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
9. உடல்நலம் என்பது .......... இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி
10. கற்றவருக்கு அழகு தருவது
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** 5x1=5

11. புற உலக ஆராய்ச்சிக்கு ............ கொழுகொம்பு போன்றது.
12. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .......
13. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ..........
14. காந்தியடிகள் ......... போற்ற வாழ்ந்தார்.
15. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ....... நீட்சியாகவே உள்ளது.

**III. பொருத்துக** 5x1=5

| | | |
|---|---|---|
| 16. இயற்கை அன்பு | - | ஆறுகள் |
| 17. இயற்கைப் பரிணாமம் | - | விசும்பு |
| 18. பூ | - | கம்பராமாயணம் |
| 19. வானம் | - | பெரியபுராணம் |
| 20. உடன்பிறந்தவர்கள் | - | கொய் |

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க** 6x2=12

21. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
22. சான்றோர்க்கு அழகாவது எது?
23. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?
24. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
25. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
26. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
27. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
29. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க** 4x4=16

30. நீர் நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறுவன யாவை?
31. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
32. உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
33. தமிழ் வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.
34. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
35. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க** 5x2=10

36. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
37. வினைமுற்று என்றால் என்ன?
38. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
39. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
40. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
41. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
42. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
43. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

**VII. அடிபிறழாமல் எழுதுக** 4+2=6

44. ''கற்றோர்க்குக்'' எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடலை எழுதுக. (அல்லது)
''வாழ்க நிரந்தரம்'' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
45. 'தன் குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VIII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி** 6x2=12

46. கலைச்சொல் தருக. அ) Herbs ஆ) Translation
47. சரியான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடுக்க. : அ) ஆடு ஆ) பானை
48. பண்மை விகுதியைச் சேர்த்து எழுதுக. அ) படம் ஆ) புல்
49. சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
வினைபடு பாலால் செவ்விது ஆங்கு.
50. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க
அ) வேலியே பயிரை மேய்ந்தது போல ஆ) குன்றின் மேலிட்ட விளக்கு போல
51. பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக. : அ) எறிந்த ஆ) பிடித்து
52. நிறுத்தற் குறி இடுக : 1. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகியன ஐந்திணைகள்

**IX. விரிவான விடையளி** 3x8=24

53. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்று குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

54. வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

55. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை

(அல்லது)

நான் விரும்பும் கவிஞர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com